செய்தி வெளியீடு **நாள்:29.07.2025**

மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தலைமையில் திருவள்ளூர் மாவட்டம், குத்தம்பாக்கத்தில் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் புதிய புறநகர் பேருந்து முனையத்தில் நடைபெற்று வரும் பணிகள் குறித்தும், சட்டமன்ற பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளில் "முதல்வர் படைப்பகங்கள்" விரைவில் பணிகள் தொடங்குவது குறித்தும் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

*****

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி இன்று (29.7.2025) சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழும அலுவலகக் கூட்டரங்கில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** தலைமையில் குத்தம்பாக்கம் புதிய பேருந்து முனையத்தில் நடைபெற்று வரும் பணிகள் குறித்தும், சட்டமன்ற பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளில் **"முதல்வர் படைப்பகங்கள்"** விரைவில் பணிகள் தொடங்குவது குறித்தும் மற்றும் அப்பணிகளுடன் சேர்ந்து நடைபெற்று வரும் இதரப் பணிகளின் தற்போதைய நிலை குறித்தும் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சி.எம்.டி.ஏ. உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., முதன்மை செயல் அலுவலர் திரு.அ.சிவஞானம், இ.ஆ.ப., தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் திரு.எஸ்.ருத்ரமூர்த்தி, திரு.அ.பாலசுப்ரமணியம், திரு.ந.ரவிக்குமார், தலைமைப் பொறியாளர் திரு.மகாவிஷ்ணு, கண்காணிப்பு பொறியாளர்கள் திரு.ராஜமகேஷ்குமார், திரு.பாலமுருகன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

Verified RealEstate